வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P .1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 13.07.2026 திங்கட்கிழமை இதழ் : 188 பக்கங்கள் : 08

# புதிய முறை ஒன்றின் ஊடாக விரைவில் மாகாணத் தேர்தல்!

## வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தகவல்



திருமலை, ஜூலை. 13


**மாகாண சபைத் தேர்தலை விரைவாகவும் முறையாகவும் நடத்துவதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான முயற்சிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.**

புதிய தேர்தல் முறை ஒன்றின் ஊடாக மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான எல்லாவிதமான முன்னெடுப்புக்களையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தல் தொடர்பாக, திருகோணமலையில் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

07

## நல்லூர், மடு திருவிழாக்களுக்கு விசேட போக்குவரத்து சேவைகள்



யாழ்ப்பாணம், ஜூலை. 13

நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழா ஆகிய இரண்டு முக்கிய திருவிழாக்களுக்கும் சிறப்பு போக்குவரத்துச் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நெடுஞ்சாலைகள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் பகுதியில் புனரமைக்கப்பட்டு வீதியினை கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

07

## நீர்கொழும்பு சிறைச்சாலை கைதிகளுக்கு காணொளி மூலம் நீதிமன்ற விசாரணை!

கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறையிலிருந்து மற்ற சிறைகளுக்கு மாற்றப்பட்ட கைதிகளின் நீதிமன்ற நடவடிக்கைகளை காணொளிக் காட்சி தொழில்நுட்பத்தின் மூலம் நடத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இன்று முதல் நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்படவேண்டிய கைதிகள் காணொளிக் காட்சி இணைப்புகள் மூலம் நடவடிக்கைகளில் இணைக்கப்படுவார்கள் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.சி. கஜநாயக்க தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறையில் சமீபத்தில் நடந்த மோதலைத் தொடர்ந்து, ஒரு குழு கைதிகள் மற்ற சிறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

07

## வங்கக் கடலில் நிலநடுக்கம்!

கொழும்பு, ஜூலை. 13

வங்கக் கடலில் நேற்று அதிகாலை 5.05 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு கோலில் 4.5 ஆக பதிவாகி உள்ளதாக இந்திய புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்வு ஆந்திர மாநிலம் வரை உணரப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக கடற்கரை நகரமான விசாகப்பட்டினத்தில் அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. மேலும் கஜூவாகா, மங்கலபேலம், சாகர் நகர், அரிவோலா, அப்புகார் உள்ளிட்ட சில பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த

07

## நீர்கொழும்பு சிறை மோதலுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு!

### ரோஹண விஜேவீரவின் மகன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அரசாங்கத்தினால் ஒருபோதும் கைவிட முடியாத பொறுப்பு உள்ளது. சிறைச்சாலைகளில் கைதிகள் மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை நாட்டின் தற்போதைய கொள்ளளவை விடவும் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளமையே இந்த நெருக்கடிகளுக்கு மூலக்காரணம் என இரண்டாம் தலைமுறை அமைப்பின் தலைவரும் ரோஹண விஜேவீரவின் மகனுமான உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவம் குறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு

07

## சகல நீதிபதிகளினதும் பதவிக் காலத்தை 2 ஆண்டுகள் நீடிப்பதற்கு அரசு யோசனை!

கொழும்பு, ஜூலை. 13

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பதவி காலத்தை மாத்திரம் நீடிக்கும் தீர்மானத்தை திருத்தம் செய்து, சகல நீதிபதிகளின் பதவிக் காலத்தையும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

நீதிச்சேவையில் நீதிபதி பதவியில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் வழக்கு விசாரணைகள் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது.

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பதவிக் காலத்தை நீடிப்பதாயின் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டு வர வேண்டும். கீழ் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் பதவி காலத்தை சட்டத்திருத்தம் ஊடாக நீடிக்க முடியும்.

நீதியரசர்களின் பதவிக் காலத்தை மாத்திரம் நீடிப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு நீதிபதிகள் சேவை சங்கம் நேற்று முன்தினம் ஏகமனதாக தீர்மானம் எடுத்துள்ளது.

கடுவலை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற நீதிவான் சேவை சங்கத்தின்

07

## அரசியல் பழிவாங்கல் மேலும் தீவிரமடையலாம்

### கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை. 13

அரசியல் பழிவாங்கல் தற்போது தீவிரமடைந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் அது இன்றும் தீவிரமடையலாம். ஆகவே எதிர்கட்சிகளின் சகல தரப்பினரும் தற்போது ஒன்றிணைய வேண்டும். பேச்சு சுதந்திரத்தை முடக்கி சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகல் நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை

07

## சிறைச்சாலை வன்முறைகள் சந்தேக நபர்கள் அடையாளம்

கொழும்பு, ஜூலை. 13


நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய அனைத்து சந்தேகநபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்தும் சாட்சியங்களைப் பதிவு செய்து வருகின்றது.

போதைப்பொருள் கடத்தல் விவகாரம் தொடர்பாக கைதிகள் இரு குழுக்களிடையே ஏற்பட்ட

07

## மறு அறிவிப்பு வரும் வரை ஹோர்முஸ் நீரிணை மூடல்!



தெஹ்ரான், ஜூலை. 13

"ஹோர்முஸ் நீரிணையை" மறு அறிவிப்பு வரும் வரை முழுமையாக மூடுவதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை அதிரடி யாக அறிவித்துள்ளது.

இதனால் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நிலவி வந்த தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம்

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனந்த சுதாகரனின் உயிருக்கு அச்சுறுத்தல்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் உயிருக்கு சிறைச்சாலையில் அச்சுறுத்தல் நிலவுவதாக தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறைச்சாலைகளில் ஏற்பட்ட அசாதாரண சூழல் ஏனைய சிறைச்சாலைகளுக்கும் பரவும் துர்ப்பாக்கிய நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது.

அந்த வகையில், நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட அசாதாரண சூழலைத் தொடர்ந்து மகசின் சிறைச்சாலையில் பதற்றமான சூழல் நிலவுவதாக நாங்கள் அறிந்திருக்கிறோம்.

அதனால், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், சிறைகளில் உள்ள தங்களின் உறவுகளை எண்ணி, மிகவும் துயரத்தோடு பரிதாபகரமான நிலையில் காணப்படுகின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் 31 வருடங்களாக சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் குறிப்பாக, மகசின் சிறைச்சாலையில் 4 தமிழ் அரசியல் கைதிகளும், வெலிக்கடை சிறைச்சாலையில் 3 பேரும், கண்டி போகம்பரையில் இரண்டு பேரும், அம்பாந்தோட்டை தங்காலை பகுதியில் உள்ள சிறைச்சாலையில் ஒருவருமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் நால்வர் 31 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஏற்கனவே அவர்கள் நோய் வாய்ப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறார்கள். இவ்வாறான பாதுகாப்பற்ற சூழல் அவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

எனவே, தமிழ் அரசியல் கைதிகளுடைய பாதுகாப்பை இந்த அரசு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதே நேரத்தில், ஆனந்த சுதாகரனின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு பாதுகாப்பு இல்லை என்பது தொடர்பாகவும் ஆனந்த சுதாகரனின் தாயார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் சிறைச்சாலையின் தலைமை அலுவலகத்துக்கு சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

ஆனந்த சுதாகரன் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூழலில், அவர் திடீரென்று கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டிருந்தார். ஆனால், அங்கே அவருக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு சூழல் அங்கே நிலவுவதாக தொடர்ச்சியாக அவருடைய தாயார் எங்களுக்கும் முறைப்பாடு செய்திருந்தார்.

எனவே தற்போது ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழலால், தமிழ் அரசியல் கைதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இந்த விடயத்தை கருத்தில் கொண்டு, தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்களை விரைவாக விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேபோல, நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக அங்கிருந்து மாற்றப்பட்ட கைதிகள் ஏனைய சிறைச்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதாகவும் அறிகிறோம்.

அதனை உடனடியாக சிறைச்சாலை நிர்வாகம் தலையிட்டு நிறுத்த வேண்டும் - என்றார். (அ)

# எதிர்க்கட்சியின் பிரேரணையை அரசாங்கமாக எதிர்கொள்வோம்!

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவத்தை பொறுப்பேற்பதாக தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். பொறுப்பேற்க முடியாது என்று ஒருபோதும் குறிப்பிடவில்லை. பொறுப்பில் இருந்தும் விலகவில்லை. எதிர்க்கட்சியினர் கொண்டு வரும் நம்பிக்கையில்லா பிரேரணையை சிறந்த முறையில் அரசாங்கமாக எதிர்கொள்வோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தொடர்பில் பூரண விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறைக்கைதிகளின் மனித உரிமையை பாதுகாப்பதை போன்று பொலிஸ் உத்தியோகத்தர்களின் மனித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்.

மனித உரிமைகளில் நிலை அடிப்படையில் வேறுபாடுகள் கிடையாது என்பதை எதிர்க்கட்சியினர் விளங்கிக் கொள்ள வேண்டும். அனைத்தையும் அரசியலுக்கு பயன்படுத்தும் கொள்கையில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் விடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவம் துரதிஸ்டவசமானது. மோதலில் உயிரிழந்த சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் இழப்பு கவலைக்குரியது. உறவுகள் இழக்கப்படும் போது அந்த குடும்பத்தின் வேதனை எவ்வாறு இருக்கும் என்பதை மனிதனாக என்னால் விளங்கிக் கொள்ள முடியும்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு மற்றும் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் சிறந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.ஆகவே விசாரணைகள் வெளிப்படைத் தன்மையாக இடம்பெறுகிறது.

சிறைக்கைதிகளின் உரிமை பற்றி பேசும் தரப்பினர் உயிரிழந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் மனித உரிமைகள் பற்றி பேசுவதில்லை. இது கவலைக்குரியது. சிறைக்கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. வகிக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகளை வேறுப்படுத்த முடியாது.

சிறைச்சாலைகளில் நெரிசல், போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும், ஒழுங்குப்படுத்தப்பட்ட குற்றச்செயல்களை தடுப்பதற்கும் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளினால் பெருமளவிலானோர் கைது செய்யப்படுகிறார்கள். அதனால் தான் சிறைச்சாலையில் நெரிசல் தீவிரமடைந்துள்ளது என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். சிறைச்சாலைகளில் நெரிசல் காணப்படுவது என்பதால் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை கைது செய்யாமல் இருக்க முடியுமா?

நீர்கொழும்பு சம்பவத்தில் தற்போது எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது. பழி சுமத்த முடியாது. முதலில் நிலைமை கட்டுப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீனமான முறையில் விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.

சிறைச்சாலைகளின் நெரிசல் நிலையை கட்டுப்படுத்த சட்டத்திருத்தம் ஊடாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.புதிய சிறைச்சாலைகளை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல, சமூகத்தில் குற்றச்செயல்களை ஒழிப்பதை பிரதான கொள்கையாக கொண்டு செயற்படுகிறோம். - என்றார். (அ)

# நீர்கொழும்பு சிறைச்சாலையில் கூர்மையான ஆயுதங்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் போது, கைதிகள் அதிகாரிகளைத் தாக்குவதற்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கூர்மையான ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொல்லுகளும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின்போது, கைதிகள் சிறைச்சாலை சமையலறைக்குள் புகுந்து அங்கிருந்த தேங்காய்களையும் எடுத்து வந்து அதிகாரிகளைத் தாக்கியது தெரியவந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்துள்ள நிலையில், சிறைச்சாலைக்குள் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கூர்மையான ஆயுதங்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொல்லுகளும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

# உயிரிழந்த சிறை அதிகாரிகளுக்கு 20 இலட்சம் ரூபா வரை நட்டஈடுகள்

கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபாய் என்பது ஆரம்பக் கட்டக் கொடுப்பனவு மட்டுமே என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்ட இந்தத் தொகை குறித்து முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரவித்துள்ள அவர், உயிரிழந்த அதிகாரிகளின் குடும்பங்களுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையை வழங்குவதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், உயிரிழந்தவர்களின் அனைத்து இறுதிக்கிரியைகளும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செலவிலேயே மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்த மோதலில் காயமடைந்த சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நட்டஈடு வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மோதலில் காயமடைந்த 7 அதிகாரிகள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர்களில் மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஏ.சி. கஜநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை. 13

இலங்கை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாத்துறையின் மூலமான இலங்கையின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

அவ்வறிக்கையின்படி, 2026 ஜனவரி முதல் ஜூன் வரையிலான சுற்றுலா வருவாய் மொத்தம் 1,511.1 மில்லியன் அமெரிக்க டொலராகும். இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான 1,712.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியாகும்.

சுற்றுலா வருவாய் மாதாந்த அடிப்படையிலும் சரிவைக் கண்டுள்ளது. மே 2026 இல் சுற்றுலாத்துறை மூலம் நாடு 155.7 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டியிருந்த நிலையில், ஜூன் மாதத்தில் அவ்வருவாய் 151.1 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.

2025 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையிலும், சுற்றுலா வருவாய் ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இலங்கை சுற்றுலாத்துறை மூலம் 169.5 மில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியிருந்ததாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர் மூலமான பண உள்வரவும் குறைந்துள்ளது.

மே மாதத்தில் தொழிலாளர் பண உள்வரவாக இலங்கை 847 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றிருந்த நிலையில், ஜூன் மாதத்தில் இந்த உள்வரவு 695 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது. இது முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 152 மில்லியன் அமெரிக்க டொலர் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

இருப்பினும், இந்த மாதாந்த வீழ்ச்சிக்கு மத்தியிலும், 2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் உள்வந்த பணவரவு, கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியை விட கணிசமானளவு அதிகமாகக் காணப்படுகிறது.

மத்திய வங்கியின் தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 3,738 மில்லியன் அமெரிக்க டொலர் பண உள்வரவு கிடைத்திருந்த நிலையில், 2026 ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் இலங்கை 4,604.8 மில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், வருடத்தின் முதல் பாதியில் வெளிநாட்டுப் பண உள்வரவில் 866.8 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பைக் குறிக்கிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.07.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், வைகாசி ஆனி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# கர்நாடக அரசியல்வாதிக்கு தமிழர் பிரச்சினைகளை விளக்குதல்

தமிழ் அரசியல்வாதிகள் எதைச் செய்யாவிட்டாலும் தவறாமல் செய்கின்ற காரியம் ஒன்று இருக்கிறது.

இலங்கையில் உள்ள வெளிநாடுகளின் இராஜதந்திரிகளுடனும் வெளிநாட்டு விஜயங்களின்போது அங்குள்ள அரசியல் தலைவர்களுடனும் சந்திக்கும்போது எடுக்கும் படங்களை சமூக ஊடகங்களில் உடனடியாகவே அவர்கள் பதிவு செய்து விடுகிறார்கள்.

இத்தகைய சந்திப்புக்களை தாங்கள் இடையறாது நடத்தி பிரச்சினைகள் குறித்து விளக்கமளித்து வருவதை தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அந்த சந்திப்புக்கள் மூலமாக இதுவரை எதைச் சாதிக்கக்கூடியதாக இருந்தது என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சில தினங்களுக்கு முன்னர் முகநூலில் பதிவொன்றைச் செய்திருக்கிறார். தென்னிந்தியாவின் கர்நாடக மாநிலத்துக்கு அவரும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத்தும் மேற்கொண்ட விஜயம் பற்றியதே அந்த பதிவு.

அந்த பதிவில்

" ஈழத்தமிழர் அரசியல் தீர்வு மற்றும் நீதி குறித்து காத்திரமான சந்திப்பு" என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

" இந்தியாவின் கர்நாடக மாநிலத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் வைத்தியர் இளையதம்பி சிறீநாத் ஆகியோர், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதல்வர் ஆர். குண்டுராவ் அவர்களின் புதல்வனும் காங்கிரஸ் கட்சியின் கர்நாடக மாநில சட்டமன்ற உறுப்பினருமான தினேஷ் குண்டுராவ் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து கலந்துரையாடினர்.

" இதன்போது, தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் தீர்வு இன்னும் எட்டப்படாத சூழலில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் இராணுவ மயமாக்கல், நில ஆக்கிரமிப்பு மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தற்போதும் பெரும் இன்னல்களுடனேயே வாழ்ந்து வருகிறார்கள் என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

" மேலும், தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் வகையிலான நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கிய நகர்வுகளில் இந்தியாவின் வகிபாகம், சர்வதேச ரீதியிலான அழுத்தங்களின் அவசியம், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பாதுகாப்பு சூழலை உருவாக்குவது தொடர்பிலும் இங்கு காத்திரமாக வலியுறுத்தப்பட்டது.

" ஈழத்தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தில் ஆறாத வடுவாகவும் தற்போது ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக அடையாளப்படுத்தப் பட்டிருக்கும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் மிக ஆழமாக உரையாடப்பட்டது. செம்மணி உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற கொடூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் தற்போதைய அவல நிலை ஆகியவற்றுக்கு சர்வதேச ரீதியிலான நியாயமான நீதியினை நிலைநாட்டுவது தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது"

சிறீதரனுக்கும் ஸ்ரீநாத்துக்கும் குண்டுராவ் என்ன பதில் அளித்தார் என்பது பற்றி முகநூல் பதிவில் எதுவும் இல்லை.

அவருக்கும் கர்நாடக மாநிலத்தின் வேறு அரசியல் தலைவர்களுக்கும் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளக்கிக்கூறி அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுப்பதற்காகத்தான் இவ்விரு பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த மாநிலத்துக்கு சென்றார்களோ அல்லது வேறு அலுவலாகச் சென்ற இடத்தில் தமிழர் பிரச்சினையைக் கூறுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார்களோ என்று தெளிவாகத் தெரியவில்லை.

கர்நாடக மாநிலத்தின் வேறு அரசியல்வாதிகளை இவர்கள் இருவரும் சந்தித்தாக வேறு பதிவு எதையும் முகநூலில் காணவில்லை.

தமிழ்நாட்டுத் தமிழருக்கே காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வதில் "மனிதாபிமானமற்ற முறையில்" நடந்து கொள்கின்ற வரலாற்றைக் கொண்ட மாநிலத்தின் ஒரு அரசியல்வாதியிடம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் கோருவதில் என்ன பொருத்தப்பாட்டை தமிழரசு கட்சியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டார்களோ? அவர்கள் தான் விளக்க வேண்டும்.

# தென்னிந்தியக் குயில் மௌனமானது

பல தசாப்தங்களாக தென்னிந்தியத் திரையுலகை ஆதிக்கம் செலுத்திய அசாதாரணமான குரலுக்குச் சொந்தக்காரரும், தலைமுறைகள் கடந்தும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற பாடல்களை தந்தவருமான புகழ்பெற்ற பின்னணிப் பாடகி எஸ். ஜானகி (88), சனிக்கிழமையன்று கர்நாடகாவின் மைசூரில் காலமானார். வயது முதிர்வு தொடர்பான உபாதைகளால் அவதிப்பட்டு வந்த அவர், மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



பாரதிராஜாவின் "16 வயதினிலே" திரைப்படத்தில் இடம் பெற்ற "செந்தூரப் பூவே" பாடல் உட்பட, சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய திரைப்பட விருதை நான்கு முறை வென்ற எஸ். ஜானகி காலமானார். பல மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய இந்த புகழ்பெற்ற பாடகி, இசைஞானி இளையராஜாவுடன் மிகச்சிறந்ததொரு கூட்டணியைக் கொண்டிருந்தார்.

ஆன்மாவை உலுக்கும் ஒரு பெரும் பாரம்பரியத்தை விட்டுச் சென்றுள்ள அவர், பாரம்பரிய இசையமைப்புகள், மெல்லிசைப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள் மற்றும் உணர்ச்சிபூர்வமான டூயட் பாடல்களை சமமான திறமையுடன் பாடினார். திரையுலகினராலும் அவரது இரசிகர்களாலும் "ஜானகி அம்மா" என்று அன்போடு அழைக்கப்படும் அவர், 18 மொழிகளில் பாடல்களைப் பாடியுள்ளார், மேலும் ஒரு குழந்தையின் குரலில் கூட சிரமமின்றிப் பாடும் திறன் பெற்றவர். கர்நாடக இசையில் பயிற்சி பெற்ற அவர், தியாகராஜ கீர்த்தனைகள் அடங்கிய இசைத்தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ் திரையுலகில், பி. சுசீலா மற்றும் பல முன்னணிப் பாடகிகள் தங்கள் இசைத்துறை வாழ்க்கையின் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் ஜானகி தனக்கென ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்டார். கே.வி. மகாதேவன் மற்றும் எம்.எஸ். விஸ்வநாதன் உள்ளிட்ட பிரபல இசையமைப்பாளர்களுடன் பணியாற்றினார். தமிழ் சினிமாவில் அவரது குறிப்பிடத்தக்க பயணம், இசைஞானி இளையராஜாவின் வருகையோடு மேலும் வேகம் பெற்றது.

அவர் தனது அறிமுகத் திரைப்படமான "அன்னக்கிளியில்" (1976) மறக்கமுடியாத பாடல்களுக்கு ஜானகியைத் தேர்ந்தெடுத்தார், இது தமிழ் திரைப்பட இசையில் ஒரு மைல்கல்லாகும்.

ஜானகி, "16 வயதினிலே" படத்தின் "செந்தூரப் பூவே" பாடலுக்காக சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய திரைப்பட விருதை வென்றார், இது சமீபத்தில் காலமான பாரதிராஜாவின் அறிமுக இயக்கமாகும்.

ஜானகி தெலுங்கு மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் சமமாகப் பிரபலமாக இருந்தார். தனது இசைச் சிந்தனைகளை மறக்க முடியாத பாடல்களாக சிரமமின்றி மாற்றும் திறன் கொண்ட, தனது மிகச் சிறந்த வெளிப்பாட்டுத் திறன் கொண்ட பாடகிகளில் ஒருவராக இளையராஜா பெரும்பாலும் ஜானகியைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களது கூட்டணி இசை பிரியர்களால் தொடர்ந்து கொண்டாடப்படும் எண்ணற்ற உன்னதமான பாடல்களை உருவாக்கியது.

டி. ஜானகிராமனின் புகழ்பெற்ற நாவலான "மோகமுள்" கதையின் திரைப்படத் தழுவலில், "சொல்லாயோ வாய் திறந்து" என்ற பாடலை அவர் பாடிய விதம், அந்த இசையமைப்பை ஒரு நீடித்த உன்னத நிலைக்கு உயர்த்தியது, இது சாஸ்திரிய சங்கீத் நேர்த்தியையும் உணர்ச்சிப்பூர்வமான ஆழத்தையும் இணைக்கும் அவரது அரிய திறனைப் பிரதிபலிக்கிறது.

ஜானகியின் பேத்தி அப்சரா வித்யுதா இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ள பதிவில், "அவர் தனது குடும்பத்தினரின் அன்பால் சூழப்பட்டு, அமைதியாக எங்களை விட்டுப் பிரிந்தார். எங்கள் இதயங்கள் கனத்திருந்தாலும், அவர் வாழ்ந்த அசாதாரணமான வாழ்க்கைக்காகவும், அவரது காலங்கடந்த இசையின் மூலம் கோடிக்கணக்கான மக்களுக்கு அவர் வழங்கிய அளப்பரிய மகிழ்ச்சிக்காகவும் நாங்கள் நன்றியுணர்வுடன் இருக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், "உலகிற்கு அவர் ஒரு அடையாளக் குரல், அவருடைய பாடல்கள் எண்ணற்ற நினைவுகளின் ஒரு பகுதியாக மாறின. எங்களுக்கு, அவர் ஒரு அன்பான பாட்டி, அவருடைய அரவணைப்பு, பணிவு, தயவு மற்றும் கருணை என்றென்றும் நிலைத்திருக்கும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பல்லபட்லா கிராமத்தில் (திருமதி ஜானகி பிறந்த இடம்), குடியிருப்பாளர்கள் இந்த புகழ்பெற்ற பாடகியுடனான தங்களது தொடர்பை பெருமையுடனும் ஏக்கத்துடனும் நினைவு கூர்ந்தனர். வோகிபோயினா சாம்பசிவ ராவ் (50) தி இந்து நாளிதழிடம் கூறுகையில், திருமதி ஜானகி தனது குடும்பத்தினர் வேறு இடத்திற்கு மாறுவதற்கு முன்பு தனது ஆரம்பகால குழந்தைப் பருவத்தை இந்த கிராமத்தில் கழித்ததாகக் கூறினார்.

பல்லபட்லாவில் உள்ள ஒரு பெரிய பூர்வீக வீடு இவர்களது குடும்பத்திற்குச் சொந்தமானது என்றும், அது சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன்பு வரை பழுதடைந்த நிலையில் இருந்ததாகவும் அவர் கூறினார்.

தெலுங்கு திரைப்பட இயக்குனர் திலீப் ராஜா (குண்டூர் மாவட்டம் தெனாலி பகுதியைச் சேர்ந்தவர்) கூறுகையில், ரேபல்லே பகுதியைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதியில் இருந்து வந்த ஒரே புகழ் பெற்ற பின்னணிப் பாடகி திருமதி ஜானகி மட்டும்தான் என்றும், இது அந்தப் பகுதி மக்களுக்கு என்றும் அழியாத பெருமிதத்தை அளிக்கிறது என்றும் கூறினார்.

**ஆரம்ப நாட்கள்**

பலரும் அறியாத விடயம் என்னவென்றால், இந்த புகழ்பெற்ற பாடகி தனது குழந்தைப் பருவத்தின் ஒரு பகுதியை தற்போதைய தெலுங்கானாவில் உள்ள பழைய கரீம்நகர் மாவட்டத்தின் ஜவுளி கிராமமான சிர் சில்லாவிலும் கழித்துள்ளார், இது சினிமா மற்றும் இசை மீதான அவரது ஆரம்பகால காதலை வடிவமைத்தது. தனது நேர்காணல் ஒன்றில், உள்ளூர் திரையரங்குகளில் அடிக்கடி திரைப்படங்களைப் பார்த்ததால், சினிமா மீதான தனது ஈர்ப்பு இங்கு தான் ஆழமடைந்தது என்று அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

தெலுங்கு சினிமாவில் அவரது பயணம் "எம்.எல்.ஏ" திரைப்படத்தின் மூலம் தொடங்கியது, அதில் அவர் "நீ ஆச அதியாச" மற்றும் "விநாவண்டி பாக்யநகரமுலோ" ஆகிய பாடல்களை பெண்டியாலா நாகேஸ்வர ராவ் இசையில் பாடினார். அதே ஆண்டு கன்னடம் மற்றும் தமிழ் உட்பட பல மொழிகளில் அவரது பாடல்கள் பதிவு செய்யப்பட்டன.

"மௌனராகம்" படத்தில் இடம்பெற்ற "சின்னச் சின்ன வண்ணக்குயில்" பாடலில் ஜானகி மற்றும் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பங்களிப்பு, மென்மையான, சொல்லப்படாத காதல் மற்றும் ஏக்கத்தை எவ்வாறு பொதிந்துள்ளது என்பதற்காக காலத்தால் அழியாத ஒன்றாக உள்ளது.

தெலுங்கானா முதல்வர் ஏ. ரேவந்த் ரெட்டி, பிஆர்எஸ் செயல் தலைவர் கே.டி. ராமாராவ் மற்றும் தெலுங்கு திரை உலகினர் அவரது பாடல்கள் மற்றும் அவருடனான தொடர்புகளின் இனிமையான நினைவுகளை நினைவு கூர்ந்தனர்.

ஜானகி 1985 ஆம் ஆண்டு பாப்பி லஹிரியின் "யார் பினா செய்ன் கஹான் ரே" பாடல் மூலம் பாலிவுட்டின் ஒளிரும் வெளிச்சத்திற்குள் நுழைந்தார், அங்கு அவரது பாரம்பரிய துல்லியம் பம்பாயின் டிஸ்கோ இசையின் அசல், கட்டுப்பாடற்ற துடிப்புடன் ஒத்துப்போனது. 1980களில், தென்னிந்திய தயாரிப்பு நிறுவனங்கள் பாலிவுட்டில் பெருமளவில் ரீமேக் செய்யத் தொடங்கியபோது, தென்னிந்தியப் பாடல்கள் ஹிந்தியில் பிரபல்யம் பெற்றன. ஜானகி ஒரு அகில இந்திய குரலாக உருவெடுத்தார். அவரது துல்லியமான உச்சரிப்பு மற்றும் நம்ப முடியாத குரல் வீச்சு எல்லை பாரம்பரிய மெல்லிசைகளில் இருந்து அதிக ஆற்றல் வாய்ந்த பாடல்களுக்கு எளிதாக மாற அவருக்கு உதவியது. லஹிரி மற்றும் லட்சுமிகாந்த்-பியாரேலால் முதல் சலில் சௌத்ரி மற்றும் ஆர்.டி. பர்மன் வரையிலான இசையமைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றிய ஜானகி, பல்வேறு இசை வகைகளை சிரமமின்றி கையாண்டார்.

மொழித்திறன்

மலையாளத்தில், ஜானகி 1957 ஆம் ஆண்டு எம்.எஸ். பாபுராஜ் இசையமைத்து, பி. பாஸ்கரன் எழுதிய "மின்னாமினுங்கு" திரைப்படத்தின் "தேலிருந்ந கினாக்கள்" பாடல் மூலம் அறிமுகமானார், இது உடனடியாக பிரபல்ரமானது. "மதனோத்சவம்" படத்தின் "சந்த்யே..." மற்றும் "ஓளங்கள்" படத்தின் துள்ளலான "தும்பி வா தும்பக்குடத்தின்" ஆகிய சோகப் பாடல்கள் அவரது பாடும் திறனில் தனித்துவமான தேசிய குணங்களைப் பெற்றன. சிறந்த பெண் பின்னணிப் பாடகிக்கான கேரள மாநில விருதை 11 முறை வென்றார்.

ஜானகி மலையாளத்தில் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார், அது அவரது தாய் மொழி அல்ல என்பதை ஒருபோதும் உணர வைக்காத வகையில் பாடினார். அவர் ஜி. தேவராஜன், வி. தட்சிணாமூர்த்தி, இளையராஜா, கே. ராகவன், எம்.எஸ். விஸ்வநாதன் போன்ற பல முன்னணி இசை அமைப்பாளர்களின் கீழ் பாடினார், பிந்தைய ஆண்டுகளில் எம்.ஜி. ராதாகிருஷ்ணன் மற்றும் ஜான்சன் போன்ற இசையமைப்பாளர்களுடனும் பணியாற்றினார்.

"அவருக்கு இசையில் முறையான பயிற்சி எதுவும் இல்லை, ஆனால் பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர் உத்தேசித்துள்ள உணர்ச்சிகளையும் நுணுக்கங்களையும் மிக எளிதாக வெளிப்படுத்தி விடுவார்," என்று கவிஞரும் பாடலாசிரியருமான ஸ்ரீகுமாரன் தம்பி கூறினார்.

(தி இந்து, பி. கோலப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 13 திங்கட்கிழமை
பராபவ வருடம் - ஆனி 29
நல்ல நேரம் : 07.45 - 08.45
ராகு காலம் : 04.30 - 06.00
திதி : திரயோதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத் தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக் குள் இருந்த பிரச்னைகள் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மன சாட்சிபடி செயல்படும் நாள்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப் பீர்கள். உறவினர், நண்பர்களிடம் மனஸ்தாபங் கள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன் னேறும் நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் வரும். பெற் றோருடன் மனம்விட்டு பேசுவீர்கள். பொதுக்காரி யங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாய முண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப் புகளை ஒப்படைப்பார்கள். மதிப்பு

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனை விக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தி யாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் உள்ள வர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படு வார்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர் களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படு வீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறை வேற்று வீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்ப ற்றாக் குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறு வீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமா வார்கள். தைரியம் கூடும் நாள்.

# 12 ஆவது நாளாக தொடர்ந்தது பலாலி மக்களின் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூலை. 13

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டம், நேற்று 12ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் பலாலி சந்திப் பகுதியில் வெய்யிலையும் பொருட்படுத்தாது தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், தமது காணிகளை உரிய உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

பல ஆண்டுகளாக இடம்பெயர்ந்த வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும், தமது சொந்த நிலங்களில் மீண்டும் குடியேறும் உரிமை தமக்குள்ளதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், காணி விடுவிப்பு தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இப்போராட்டங்களுக்கு அரசியல்வாதிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்துள்ளனர். (அ)

# சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் மாகாண விளையாட்டு போட்டி யாழில்



யாழ்ப்பாணம், ஜூலை. 13

வடக்கு மாகாண வரலாற்றில் முதன்முறையாக சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு இடையிலான மாகாண விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

வடக்கு மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நேற்று முன் தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் இந்த மாகாண மட்ட விளையாட்டு விழா ஆரம்பமானது.

சிறுவர் இல்லங்களில் வாழும் பிள்ளைகளின் விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் முதல்முறையாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 29 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த சுமார் 1100 சிறுவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 9 இல்லங்களும், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலிருந்து தலா 6 இல்லங்களும், வவுனியாவிலிருந்து 5 இல்லங்களும், முல்லைத்தீவிலிருந்து 3 இல்லங்களும் பங்கேற்றிருந்தன.

மாகாண மட்டப் போட்டிகளுக்கு முன்னதாக, மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் திறமையான வீரர், வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்ட பின்னரே இந்த இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

12, 14, 16, 18 மற்றும் 20 வயதுப் பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தட்டெறிதல், குண்டெறிதல், அஞ்சல் ஓட்டம், கயிறு இழுத்தல் மற்றும் பாரம்பரிய விளையாட்டான தாச்சி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் சிறுவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜெயராணி பரமோதயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

வாத்திய இசையுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றம், தேசியக் கொடி, மாகாணக் கொடி மற்றும் ஒலிம்பிக் கொடி ஏற்றுதல், ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல், வீரர்கள் மற்றும் நடுவர்களின் சத்தியப்பிரமாணம், அணி நடை மரியாதை உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியாக, போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், வடக்கு மாகாணத்தின் முதலாவது சிறுவர் இல்லங்களுக்கிடையிலான மாகாண விளையாட்டுப் போட்டி நிறைவுற்றது. (அ)

# புலோலியில் போதை தடுப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் “முழு நாடே ஒன்றாக” என்ற தேசிய செயற்திட்டத்தின் கீழ், போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கிலான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன் தினம் 4.30 மணியளவில் புலோலி கிழக்கு கிராமத்தில் நடைபெற்றது.

புலோலி கிழக்கு பொலிஸ் பாதுகாப்புக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பருத்தித்துறை பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஓ. விஜயரத்தின மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் லங்கா ஆகியோர் கலந்துகொண்டு போதைப்பொருள் ஒழிப்பு, குற்றத் தடுப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு உரைகளை வழங்கினர்.

அங்கு கருத்து தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள், “ஒரு கிராமம் அல்லது சமூகத்தில் சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து செயல்படும் அமைப்பே பொலிஸ் பாதுகாப்புக் குழுவாகும்” என தெரிவித்தனர்.

மேலும், போதைப்பொருள் பாவனை, திருட்டு, வன்முறை உள்ளிட்ட குற்றங்களைத் தடுப்பதற்கும், சமூகத்தில் பாதுகாப்பு விழிப்புணர்வை வலுப்படுத்துவதற்கும் கிராம மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிகழ்வில் 6ஆம் வட்டார பிரதேச சபை உறுப்பினர் புலோலியூர் ரமணன், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மலையக காணி உரிமை கொள்கையை அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்!

### மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜூலை. 13

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் காணி உரிமை தொடர்பில் அரசாங்கம் தனது உண்மையான கொள்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுக்களால் காலம் கடத்தாமல், "ஹற்றன் பிரகடனத்தில்" வழங்கிய உறுதிமொழி தொடர்பில் அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மலையக மக்கள் ஆடம்பர தேவைகளுக்காக காணிகளை கோரவில்லை என்றும், பல தலைமுறைகளாக பெருந்தோட்டங்களை உருவாக்கிய மக்களுக்கு வாழ்விட மற்றும் வாழ்வாதார காணித் துண்டுகள் வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பெருந்தோட்டங்களில் வீடில்லாத மக்கள் அமைக்கும் குடியிருப்புகளை "அத்துமீறியவை" எனக் கூறி நடவடிக்கை எடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார்.

அத்துடன், மலையக காணி உரிமை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 13

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் தீவிரமான தென்மேற்கு பருவநிலை காரணமாக, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மொனராகலை, அம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பரப்புகளுக்கும், சிலாபத்திலிருந்து புத்தளம் ஊடாக காங்கேசன்துறை வரையிலான கடற்பரப்புகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும், கடல் பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்கள் மற்றும் கடற்சார் சமூகத்தினர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்கால அறிவித்தல்களை தொடர்ந்து கண்காணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## 60 அதிஉயர் அபாய வலயங்களை உள்ளடக்கி இன்று முதல் நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு!

கொழும்பு, ஜூலை. 13

நாடளாவிய ரீதியில் அடையாளங்காணப்பட்டுள்ள 60 அதி உயர் டெங்கு அபாய வலயங்களை முழுமையாக உள்ளடக்கும் வகையில், விசேட தேசிய டெங்கு ஒழிப்பு அதிரடி வேலைத்திட்டமொன்று இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த 60 அதிஉயர் வலயங்களில் 23 பிரதான வலயங்கள் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதி செயலகத்தின் நேரடி வழிகாட்டலின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள "தூய்மையான இலங்கை" தேசியக் கொள்கைத் திட்டத்தின் விசேட ஒருங்கிணைப்புடன், மேல் மாகாணத்தின் குறிப்பிட்ட அந்த 23 வலயங்களிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலே கொசு ஒழிப்புச் செயல்பாடுகள் மிக தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடையாளங்காணப்பட்டுள்ள அதிக ஆபத்துள்ள பகுதிகளில் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் தடுப்பு முயற்சிகளை மேலும் பலப்படுத்துவதே இப்புதிய மகா திட்டத்தின் முதன்மை நோக்கமாகும் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் கலாநிதி பிரசீலா சமரவீர உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் மொத்தம் 67143 டெங்கு நோயாளர்கள் உத்தியோகபூர்வமாகப் பதிவாகியுள்ளதுடன், டெங்கு காய்ச்சலினால் பலியானோரின் ஒட்டு மொத்த மரண எண்ணிக்கை 47ஆக உயர்வடைந்துள்ளதாகச் சுகாதாரத் திணைக்களம் மேலும் கவலை வெளியிட்டுள்ளது. (அ)

## திட்டமிட்ட அளவை விட 2 மடங்கு அதிக அரிசி நாட்டுக்கு இறக்குமதி!

### வர்த்தக பிரதி அமைச்சர் அமைச்சர் தகவல்



கொழும்பு, ஜூலை. 13

உள்நாட்டுச் சந்தையில் அரிசி விநியோகத்தை ஸ்திரப்படுத்துவதற்காக, கடந்த 2025 ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த அளவை விடவும் இரண்டு மடங்குக்கும் அதிகமான அரிசி உத்தியோகபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் 75000 மெற்றிக் தொன் அரிசியை மாத்திரம் இறக்குமதி செய்ய அரசாங்கம் உத்தியோகபூர்வமாகத் திட்டமிட்டிருந்த போதிலும், சந்தை நிலவரங்களைக் கருத்திற்கொண்டு சுமார் 180000 மெற்றிக் தொன் அரிசி வரை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விடுத்த அறிவிப்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, உள்நாட்டில் நிலவிய கீரிச் சம்பா அரிசித் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், எவ்வித கேள்விகோரல் நடைமுறைகளுமின்றி 14 நாள்கள் கொண்ட அவசரக் கால அவகாசத்தின் கீழ், கீரி பொன்னி சம்பா உள்ளிட்ட மாற்று அரிசி வகைகள் ஒரு 156000 மெற்றிக் தொன் வரை இந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் கீரிச் சம்பா அரிசியின் விலை உத்தியோகபூர்வமாக 260 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், வர்த்தகர்கள் அதனை 380 முதல் 400 ரூபாய் வரையான அதிக விலைக்கு விற்பனை செய்தமையினாலேயே இந்த அவசர இறக்குமதி உத்திகள் அமுல்படுத்தப்பட்டதாகப் பிரதி அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

உள்நாட்டில் நெல் கொள்வனவு விலை வீழ்ச்சியடைந்ததற்கு அரிசி இறக்குமதி காரணம் அல்லவெனவும், உள்நாட்டு நெல் உற்பத்தியில் ஏற்பட்ட எதிர்பாராத மேலதிக உபரியே இதற்குக் காரணம் எனவும் பிரதி அமைச்சர் ஆர். எம். ஜயவர்தன தெரிவித்துள்ள போதிலும், தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராதா தென்னக்கோன் உள்ளிட்ட விவசாய அமைப்புகள் இக் கூற்றை முற்றாக நிராகரித்துள்ளன.

நாட்டில் வருடாந்த அரிசித் தேவைக்குத் தாராளமாகப் போதுமான நெல் இருப்புக்கள் உள்ள பின்னணியில், அரசாங்கம் போதிய தரவுப் பொறிமுறைகளின்றி தன்னிச்சையாக மேற்கொண்ட இந்த மட்டற்ற இறக்குமதிகளே நெல் சந்தையை முற்றாக ஸ்தம்பிதமடையச் செய்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொடூர வன்முறை தாக்குதல்களாலேயே சிறைக் கைதுகள், காவலர்கள் உயிரிழப்பு!

**மரண விசாரணை அறிக்கைகள் மூலம் தகவல்**

கொழும்பு, ஜூலை. 13

நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட கொடூர வன்முறை மோதல்களின்போது கொல்லப்பட்ட கைதிகள் மற்றும் சிறை உத்தியோகத்தர்களின் மரணங்கள், கடுமையான மற்றும் மிகக் கொடூரமான வன்முறைத் தாக்குதல்களினாலேயே சம்பவித்துள்ளன என்பது உத்தியோகபூர்வ மரணப் பரிசோதனை அறிக்கைகளின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிவந்துள்ளது.

நீர்கொழும்பு போதனா மருத்துவமனையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட விசேட நீதிமன்ற மருத்துவ அதிகாரிகள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த உத்தியோகபூர்வ உடற்கூற்றுப் பரிசோதனைகளின் போதே, வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் ஏற்பட்டுள்ள பாரிய உள்காயங்கள் மற்றும் சிதைவுகள் உத்தியோகபூர்வமாகக் கண்டறியப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலகக் குற்றங்களுடன் தொடர்புடைய "கட்டுவெல்லேகம சுரேஷ்" என அழைக்கப்படும் சுரேஷ் புஷ்பகுமார என்பவரது தலைமையிலான ஒரு குழுவினரால், சிறைச்சாலைக்குள் இருந்த மற்றுமொரு கைதிகள் குழுவினர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலே இந்த மகா இரத்தக் களரிக்கு பிரதான காரணியாகும் எனப் புலனாய்வு அதிகாரிகள் தற்பொழுது கண்டறிந்துள்ளனர்.

சிறைச்சாலை உள்கட்டமைப்புகளுக்குள் முன்னெடுக்கப்பட்டு வந்த சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் விநியோகம் குறித்துச் சிறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல்களை உத்தியோகபூர்வமாக வழங்கிய கைதிகளை இலக்கு வைத்தே இக் கொடூரப் பழிவாங்கல் தாக்குதல்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டுள்ளன.

இம் மோதலின் போது இரும்புத் கம்பிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டு, தலையில் ஏற்பட்ட பாரிய காயங்கள் மற்றும் கை, கால்கள் முறிந்த நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த 31 வயதுடைய கணேகொட ஆரச்சிலாகே கயான் சம்பத் என்ற கைதியே இந்த வன்முறையின் முதலாவது பலியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.


இக் கொடூரக் கொலையுடன் தொடர்புடைய 15 பிரதான சந்தேக நபர்களைப் பொலிஸார் தற்பொழுது உத்தியோகபூர்வமாக அடையாளப்படுத்தியுள்ளதுடன், அவர்களுக்கு எதிராகக் கடுமையான குற்றவியல் சட்ட நடவடிக்கைக்கள் எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலை வலயமானது தற்போதும் ஒரு தீவிரக் குற்றப் புலனாய்வுக் களமாக நீடிப்பதனால், அங்கு கைதிகள் எவரையும் தடுத்து வைக்கப்போவதில்லை என்ற உத்தியோகபூர்வக் கொள்கை முடிவைச் சிறைச்சாலைகள் திணைக்களம் மீள உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சிறைகளில் போதைப்பொருள் தொடர்புடைய கைதிகளை உடனே தனிமைப்படுத்தவேண்டும்!

**அரசாங்கத்திடம் முபாரக் அப்துல் மஜீத் கோரிக்கை**



அம்ப்பாறை, ஜூலை. 13

இலங்கை சிறைச்சாலைகளில் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை ஏனைய கைதிகளிடமிருந்து தனிமைப்படுத்தி வைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஐக்கிய காங்கிரஸின் ஊடகப் பேச்சாளரும் இலங்கை உலமா கட்சியின் தேசியத் தலைவருமான முபாரக் அப்துல் மஜீத் வலியுறுத்தினார்.

நாட்டின் பல சிறைச்சாலைகளில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் உயிரிழப்புகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது கொலை, திருட்டு, வன்முறை, போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப் பொருள் விற்பனை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஒரே மண்டபத்தில் அடைக்கப்படுவது பாரிய சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாதாரண குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்படுபவர்கள், போதைப்பொருள் பாவிப்பவர்களுடன் ஒரே இடத்தில் தங்க வைக்கப்படுவதன் காரணமாக, அவர்களும் அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகும் அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், போதைப்பொருள் விற்பனை மற்றும் விநியோகத்திலும் ஈடுபடத் தொடங்குவதால், சிறைச்சாலைகளுக்குள்ளேயே புதிய போதைப்பொருள் வியாபாரிகள் உருவாகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் எச்சரித்தார்.

இந்த நிலைமையைத் தடுக்கும் வகையில், போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு தனித்தனி மண்டபங்கள் ஒதுக்கப்பட்டு, ஏனைய கைதிகளுடன் கலக்காமல் பாதுகாப்பான முறையில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

(அ)

# ஜூனில் குறைவடைந்த வெளிநாட்டு பணவரவு!

கொழும்பு, ஜூலை. 13

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்கள் அனுப்பிய பணத்தின் மூலம், கடந்த ஜூன் மாதத்தில் நாடு 695 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் புதிய புள்ளிவிவரங்களின்படி, கடந்த மே மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல்கள் மூலம் 847 மில்லியன் டொலர் கிடைத்திருந்த நிலையில், ஜூன் மாதத்தில் அது 152 மில்லியன் டொலர்களால் குறைந்துள்ளது.

இதேவேளை, 2026 ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் மூலம் இலங்கைக்கு கிடைத்த மொத்த வருவாய் 4.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இது 23.2 வீத அதிகரிப்பு என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.


மேலும், 2026 ஜூன் மாதத்தில் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 151.1 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை பெற்றுள்ளது.

எனினும், 2025 ஜூன் மாதத்தில் சுற்றுலாத்துறை வருவாய் 169.5 மில்லியன் டொலராக இருந்த நிலையில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சுற்றுலா வருவாயிலும் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

(அ)

# தமிழரின் நிரந்தர அரசியல் தீர்வே சம்பந்தனின் இறுதியான இலட்சியம்

**நினைவேந்தல் நிகழ்வில் எம்.ஏ.சுமந்திரன்**



திருமலை, ஜூலை. 13

மறைந்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் தனது ஆயுட் காலத்திற்குள் தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மறைந்த தலைவர் இரா.சம்பந்தனின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் திருகோணமலை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மறைந்த தலைவர் சம்பந்தனுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

மறைந்த தலைவர் சம்பந்தனை 1961ஆம் ஆண்டு தந்தை செல்வா அரசியலுக்கு வருமாறு அழைத்தபோது அவர் அதனை மறுதலித்திருந்தார். அதன் பின்னர் 1970இல் மீண்டும் அழைத்த போது அவர் அதனையும் நிராகரித்தார். ஈற்றில் 1975 இல் இடைத்தேர்தலில் தந்தை செல்வாவின் வலிந்த உந்துதலால் அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டார். அதன்பின்னர் 1977 இல் பொது தேர்தலில் சம்பந்தன் போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தை கட்சிக்கு வழங்கியிருக்கவில்லை.

இருப்பினும் அமிர்தலிங்கம் சம்பந்தனுக்கான சந்தர்ப்பத்தை வழங்கினார். அதனையடுத்து அவரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. அக்காலத்தில் சிறந்த சட்டத்தரணியாக இருந்த சம்பந்தன் சுமார் 700 வழக்குகளை கையாண்டு கொண்டிருந்த நிலையில் அவரால் வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகும் போது அரசியல் பணிச்சுமையால் உரியவாறு தயார்ப்படுத்தல்களை செய்ய முடியாமையின் காரணமாக தொழில்முறை சட்டத்தரணி செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.

அத்தகையவர், நீலன் திருச்செல்வம், ஜி.எல்.பீரிஸ் ஆகியோரின் கூட்டில் உருவான அரசியல் தீர்வு வரைவை பின்னர் சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பெயரில் முன்னகர்த்தியபோது, அது மலினப்படுத்தப்பட் டமைக்காக சந்திரிகாவுடன் முரண்பட்டதோடு மட்டுமல்ல, நீலனின் மரணம் இவ்வாறு மலினப்படுத்தப்பட்ட வரைவை அமுல்படுத்துவதற்காகவா என்று கேள்வி எழுப்பவும் செய்திருந்தார்.

இதேவேளை, இறுதி வரையில் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்த அவர் 2015ஆம் ஆண்டு ஆட்சியில் புதிய அரசியலமைப்புக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது, முதலாவது வழிநடத்தல் கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமாரவுடன் நடத்திய உரையாடல் மிகவும் முக்கியமானது.

வழிநடத்தல் கூட்டம் ஆரம்பமாகியபோது, தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாடு என்னவென்பதை அறிவதற்கு தாம் விரும்புவதாக அநுரகுமார பகிரங்கமாக கூறினார். அப்போது சம்பந்தன் மிகத்தெளிவாக சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வுடன் அரசியல் தீர்வு அவசியம் என்றார்.

அப்போது அநுரகுமார சமஷ்டி என்ற சொற்பதம் அவசியமா என்று கேள்வி எழுப்பினார். அதற்கு சம்பந்தன், நாம் பெயர் பலகைகளில் தொங்கிக் கொண்டிருக்கவில்லை. ஆனால் உள்ளடக்கத்தில் சமஷ்டிக் கட்டமைப்பு மிகவும் அவசியமானது என்று வலியுறுத்தினார். அதற்கு அநுரவும் இணங்கினார். அதனடிப்படையில் தான் புதிய அரசியலமைப்புக்கான ஏனைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு தமிழ் மக்களின் நிலைப்பாடு மிகத்தெளிவாகத் தெரியும் என்பதில் மாற்றுகருத்துக்கு இடமில்லை - என்றார்.

(அ)

## யாழ் பல்கலையில் "நீதம்" இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை. 13

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுத்த நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நேற்று முன் தினம் காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் சம்பத் அபயக்கோன் பிரதம விருந்தினராகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன்

கௌரவ விருந்தினராகவும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றிருந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டு வருவதுடன் இம்முறை பத்தாவது தடவையாகவும் குறித்த இதழ் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புதிய முறை ஒன்றில் ஊடாக...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் தொடர்பான விசேட குழு மாகாண சபை தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவில் நானும் ஒரு அங்கத்தவராக இணைந்துள்ளேன்.

இந்த குழுவின் தலைவரான வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சரின் தலைமையில் பாராளுமன்றத்தில் மிகக் காத்திரமான பங்களிப்பை நாங்கள் வழங்கி வருகின்றோம். பெண் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண் உறுப்பினர்களுடன் இது தொடர்பாக ஏற்கனவே இரு தடவைகள் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆகியோரை வரவழைத்து, அவர்களின் முன்மொழிவுகள், ஆலோசனைகள் மற்றும் யோசனைகளை நாங்கள் பெற்றுக்கொண்டுள்ளோம்.

தற்போதைய நிலையில் இந்த விடயம் இன்னும் கலந்துரையாடல் மட்டத்திலேயே இருந்து வருகின்றது. தேர்தல் முறையில் உள்ள சட்டச் சிக்கல்கள் கடந்த 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் இருந்த அரசாங்கத்தினால் புதிய தேர்தல் முறை ஒன்று முன்மொழியப்பட்டிருந்தது.

எனினும், அது தொடர்பாக சட்டச் சிக்கல்கள் நீடித்ததோடு, எல்லை நிர்ணயம் தொடர்பான பிரச்னைகளும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக, தற்போதைய சூழலில் விகிதாசார தேர்தல் முறையில் மாத்திரம் இந்த தேர்தலை நடத்த நாம் முயற்சி செய்தாலும், அங்கேயும் பெண் பிரதிநிதித்துவம் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பாக சில சிக்கல்கள் காணப்படுகின்றன.

விரைவில் புதிய தேர்தல் முறை இவ்வாறான நிலைக்கு மத்தியில், அனைத்து தரப்பினருடனும் நாம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான புதிய தேர்தல் முறை ஒன்றின் ஊடாக மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான எல்லாவிதமான முன்னெடுப்புக்களையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே, அரசாங்கம் இந்த மாகாண சபை தேர்தலை மிக விரைவாக நடத்துவதற்கே முயற்சித்து வருகின்றது என்பதுடன், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தற்பொழுது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## நல்லூர், மடு திருவிழாக்க...

வடக்குக்கான ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழாவுக்காகச் சிறப்பு ரயில் சேவை மற்றும் பஸ் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகிறோம்.

மலையக பகுதிகளில் ரயில் பாதைகள் சேதமடைந்துள்ளதால், அவற்றின் புனரமைப்புப் பணிகளுக்காகச் சில ரயில் இயந்திரங்களை பயன்படுத்தவேண்டியுள்ளது.

அதற்காக 4-5 ரயில் இயந்திரங்கள் அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

வரகாபொல பகுதியில் ஒரு ரயில் இயந்திரம் இன்னமும் மீட்க முடியாமல் சிக்கியுள்ளது. இதனால் ரயில் சேவைக்கு தேவையான ரயில் இயந்திரங்கள் இல்லாத நிலைமை காணப்படுகிறது. இதொரு தற்காலிகப் பிரச்னை.

இவ்வாறான நெருக்கடிகள் இருந்தாலும், நல்லூர் திருவிழா மற்றும் மடு திருவிழா ஆகிய இரண்டு முக்கிய திருவிழாக்களுக்கும் நிச்சயமாக சிறப்பு சேவைகளை வழங்குவோம்

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் ஒரே ஒரு ரயில் நிலையமான மாங்குளம் ரயில் நிலையத்தில், அனைத்து பு ரயில்களையும் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலருடன் கலந்துரையாடியுள்ளேன்.

ரயில் திணைக்களத்தை டிஜிற்றல் மயமாக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது. அதனால், முற்பதிவு பிரச்னைகள் வராது என நினைக்கிறேன்.

பிற ரயில் நேர அட்டவணையை கருத்தில் கொண்டு, மாங்குளத்தில் புகையிரத்தை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும்-என்றார். (அ)

## சகல நீதிபதிகளினதும்...

வருடாந்த பொதுக்கூட்டத்தில் அரசாங்கத்தின் குறித்த யோசனை தொடர்பில் இரகசிய வாக்கெடுப்பு ஊடாக தமது நிலைப்பாட்டை அறிவிக்குமாறு சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற 65 உறுப்பினர்களும் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்துக்கு அதிருப்தியை வெளிப்படுத்தினர். (அ)

## வங்கக் கடலில்...

நிலநடுக்கத்தின் மையமானது காக்கிநாடா கடற்கரையில் இருந்து கடலில் சுமார் 225 கி.மீ. தூரத்தில் அமைந்திருந்ததாக இந்திய புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசியல் பழிவாங்கல்...

நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் உட்பட பொதுமக்களையும் ஆட்சியாளர்கள் விரோதிகளாகவே பார்க்கிறார்கள்.

அரசியலில் எதிர்மறையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்கள் அரச நிதி மோசடி சட்டம், அரசியல் மற்றும் சிவில் உரிமை சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகிய மூன்று சட்டங்களால் இன்று இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

அரசியல் பழிவாங்கல் தற்போது தீவிரமடைந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் அது இன்றும் தீவிரமடையலாம். ஆகவே எதிர்கட்சிகளின் சகல தரப்பினரும் தற்போது ஒன்றிணைய வேண்டும். பேச்சு சுதந்திரத்தை முடக்கி சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

அரசாங்கத்தின் சர்வாதிகார போக்குக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகளே ஆகவே மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

ஆளும் தரப்பில் உள்ளவர்களின் ஊழல் மோசடிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ளது. நிலக்கரி மோசடி விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா முன்கூட்டியதாகவே குறிப்பிட்டு விட்டார்.

இந்த ஆணைக்குழு ஊடாக ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் விடுவித்து விடுதலையாக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.இவ்வாறான கருத்துக்கள் சுயாதீன நீதிபதிகளின் பணிகளையும் அவமதிப்பதாக அமையும்-என்றார். (அ)

## மறு அறிவிப்பு வரும் வரை...

மீண்டும் கேள்விக்குறியாகியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் அனுமதிக்கப்படாத மாற்றுப் பாதையில் சென்ற சைப்ரஸ் நாட்டின் வணிகச் சரக்குக் கப்பல் ஒன்றை நோக்கி ஈரான் கடற்படை எச்சரிக்கைத் தாக்குதல் நடத்தியது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, “மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீடுகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் முழுமையாக முடியும் வரை ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டிருக்கும்.

இதன் வழியே எந்தவொரு வணிகக் கப்பல்களும் செல்ல அனுமதி இல்லை என ஈரான் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஈரான் வணிகக் கப்பலைத் தாக்கியதற்கும், கடல் எல்லையை மூடியதற்கும் பதிலடியாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவின் பேரில் அமெரிக்க இராணுவம் ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது.

ஈரானின் பந்தர் அப்பாஸ், கியூஎஸ்எம் தீவு மற்றும் சிரிக் ஆகிய கடலோரப் பகுதிகளில் உள்ள ஈரானிய இராணுவத் தளங்கள் மற்றும் ஏவுகணைக் கிடங்குகளைக் குறிவைத்து அமெரிக்கா குண்டுகளை வீசி வருகிறது.

சர்வதேசக் கப்பல் போக்குவரத்தைச் சீர்குலைக்கும் ஈரானின் நடவடிக்கைக்கு அமெரிக்கா கடுமையான விலையைக் கொடுக்க வைக்கும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது.

உலகளவில் பயன்படுத்தப்படும் கச்சா எண்ணெய் மற்றும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவில் ஐந்தில் ஒரு பங்கு (20 வீதம்) இந்த ஹோர்முஸ் நீரிணை வழியாகவே கடத்தப்படுகிறது.

இந்த எரிசக்திப் பாதை மூடப்பட்டுள்ளதால், உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் கடுமையாக உயர்ந்து உலகளாவிய பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நிறுவனங்கள், சங்கங்களுக்கான புதிவுக் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை. 13

நிறுவனங்கள் மற்றும் சங்கங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணங்களை அதிகரிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய,தனியார் நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 4,600 ரூபாவிலிருந்து 5,200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொது நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 23,000 ரூபாவிலிருந்து 26,400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

பொறுப்பு வரையறுக்கப்படாத நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 17,250 ரூபாவிலிருந்து 19,800 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## நீர்கொழும்பு சிறைச்சாலை...

மாற்றப்பட்ட கைதிகளை அவர்களது வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்வது ஒரு சவாலாக மாறியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியது.

எனவே, காணொளிக் காட்சி தொழில்நுட்பத்தின் மூலம் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்படுவதை எளிதாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆணையாளர் கஜநாயக்க தெரிவித்தார்.

இதற்கிடையில், நீர்கொழும்பு சிறையில் சமீபத்தில் நடந்த மோதலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக சிறைச்சாலைகள் திணைக்களம் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது. (அ)

## சிறைச்சாலை வன்முறைகள்...

மோதலில், சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

துரதிர்ஷ்டவசமாக, குறித்த சம்பவத்தில் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

மோதலில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் தலைகளில் கொடூரமாகத் தாக்கப்பட்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோதலைத் தொடர்ந்து கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டு வரும் நிலையில், எஞ்சியிருக்கும் 600 கைதிகளும் விரைவில் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

உயிரிழந்த கைதிகளின் உடலங்கள் அனைத்தும் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

## நீர்கொழும்பு சிறை மோத...

விசேட கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

உயிரிழந்த அதிகாரிகள் மற்றும் கைதிகள் ஆகிய அனைவரும் மனிதர்கள் என்ற ரீதியில் தமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தற்போது எமக்குக் கிடைத்துள்ள தரவுகளின்படி, இலங்கையின் சிறைச்சாலை கட்டமைப்புக்குள் தாங்க முடியாத அளவுக்கு கைதிகளும் தடுப்புக்காவலில் உள்ளோரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கால மற்றும் தற்போதைய அரசாங்கங்கள் இந்த நெருக்கடிக்கு முறையான பொறுப்புக்கூறலை வழங்கியதாகத் தெரியவில்லை. சிறைச்சாலை கட்டமைப்பை நவீனமயப்படுத்தாமை மற்றும் இடவசதிகளை விரிவுபடுத்தத் தவறியமையின் நேரடி விளைவாகவே இன்று இந்த மோதல் சம்பவமும் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

கடந்த கால தவறுகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவே மக்கள் இந்த அரசாங்கத்துக்கு புதிய ஆணையை வழங்கியுள்ளனர். எனவே, தற்போதைய அரசாங்கம் வெறுமனே பேச்சளவில் மட்டும் நின்றுவிடாமல், இந்த நெருக்கடிக்கு உடனடி தீர்வுகளைக் கண்டறியவேண்டும்.

இதற்கு தீர்வு காண வேண்டுமாயின், நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை வேகப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை உடனடியாக அமல்படுத்துவதில் அரசாங்கம் நேரடியாக தலையிட வேண்டும். அத்துடன், சிறைச்சாலைகளுக்குள் பணியாற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பையும் அரசாங்கம் துரிதமாக உறுதிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சித் தலைவரும் ஆளுங்கட்சியின் தலைவர்களும் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கும் பாரம்பரிய பாணி மிகவும் கவலைக்குரியது. இந்த விடயத்தை வெறும் அரசியல் குற்றச்சாட்டுகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் ஒரு வெற்று விவாதமாக மாற்றிக்கொள்ளக் கூடாது.

நாட்டு மக்கள் இந்த அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியதே பழைய அரசியல் கலாசாரத்திலிருந்து விடுபட்டு முன்னோக்கிச் செல்வதற்காகத்தான். எனவே, சிறைச்சாலையின் ஒட்டுமொத்த செயல்முறையையும் அவதானித்து, இதனை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்தாமல் இதற்கான உண்மையான தீர்வுகளை தேட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# ஆறு தமிழ் பேசும் கட்சிகள் விரைவில் கூட்டு உடன்பாடு

கொழும்பு, ஜூலை. 13

ஆறு தமிழ் பேசும் அரசியல் கட்சிகள், தங்களுக்குப் பொதுவான விடயங்கள் குறித்து ஒன்றிணைந்து செயல்படுவதற்கான உடன்படிக்கையொன்றை இன்று திங்கள் கிழமை இடம்பெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவிக்கவுள்ளன.

தற்போதைய சூழலில் பொதுவான நலன் சார்ந்த விடயங்களில் ஒன்றிணைந்து செயல்பட தாங்கள் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாகவும், அது தொடர்பான மேலதிக விவரங்களை நிகழ்வின் போது வெளிப்படுத்தப்போவதாகவும் அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, இலங்கை தமிழரசுக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளே இதில் உள்ளடங்குகின்றன. (அ)

# 2050 இல் 35 மில்லியன் பேருக்கு உலகில் புற்றுநோய் பாதிப்புகள்!

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 13

உலகளவில் புற்றுநோய் பாதிப்பு அபாயகரமாக அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

தற்போது ஆண்டுக்கு சுமார் 20.6 மில்லியனாக இருக்கும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை, 2050ஆம் ஆண்டளவில் 35 மில்லியனாக உயரும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதய நோய்களுக்கு அடுத்தபடியாக உலகில் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தும் நோயாகப் புற்றுநோய் உள்ளது.

மருத்துவத் துறையில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும், புற்றுநோயைத் தடுக்கும் முறைகள், ஆரம்பக்கால கண்டறிதல் மற்றும் அனைவருக்கும் சமமான சிகிச்சை கிடைப்பதில் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

புற்றுநோய் பாதிப்பைக் கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகள், ஆரம்ப கால பரிசோதனைகள் மற்றும் தரமான சிகிச்சை முறைகளில் அதிக முதலீடு செய்ய வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தனிநபர்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மாற்றங்களும் இந்தச் சவாலை எதிர்கொள்ள அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நீதிபதிகளின் பதவிக் கால நீடிப்பு; நிறைவேற்றுத்துறையின் இலஞ்சம்

## சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 13

அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக தற்போது பதவியில் உள்ள நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளின் பதவி காலத்தை நீடிப்பது நிறைவேற்றுத்துறையால் நீதிபதிகளுக்கு வழங்கப்படும் இலஞ்சம் அல்லது பரிசாகவே கருதப்படும். நீதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும். ஆகவே ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது. ஆனால் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் புதிய யாப்புருவாக்கத்துக்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளைக் கூட முன்னெடுக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் தமக்கு ஏற்றாட்போல் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டு வந்து பிரதம நீதியரசர் உட்பட உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதியரசர்களின் பதவி காலத்தை நீட்டிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தது. இதற்கு கடுமையான எதிர்ப்பு வெளியானதன் பின்னர் தற்போது நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளின் பதவி காலத்தை நீட்டிப்பதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக தற்போது பதவியில் உள்ள நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகளின் பதவி காலத்தை நீடிப்பது நிறைவேற்றுத்துறையால் நீதிபதிகளுக்கு வழங்கப்படும் இலஞ்சம் அல்லது பரிசாகவே கருதப்படும். இது முறையற்றது.

நீதிபதிகளின் பதவி காலத்தை அதிகரிப்பதாயின் தற்போது சேவையில் உள்ளவர்களின் பதவிக் காலத்தை அதிகரிக்க கூடாது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஊடாகவே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிபதிகளின் பதவி காலத்தை நீடிக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக நீதிமன்ற சமூகம் மற்றும் நீதிபதிகள் சங்கங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது - என்றார். (அ)

# கொழும்பு பல்கலை விஞ்ஞான பீடத்தின் கல்வி நடவடிக்கை இணையவழி மூலம்!

கொழும்பு, ஜூலை. 13

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஒரு வார காலத்திற்கு இணையவழியூடாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் டெங்கு நோய் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டும், மாணவர்கள் விடுத்த கோரிக்கைகளை கவனத்திற்கொண்டும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் இந்திக கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பல்கலைக்கழகத்தை மூடுவது தொடர்பான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று துணைவேந்தர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களும் வழமை போன்று கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விடுதிகள் அனைத்தும் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

முன்னதாக, கலைப் பீடம், சட்ட பீடம், கல்வி பீடம் மற்றும் முகாமைத்துவ பீடம் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகளை ஜூலை 9 முதல் ஒரு வார காலத்திற்கு இணையவழியூடாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கதிர்காமம் பாத யாத்திரையில் பயணித்த மற்றுமொரு யாத்திரிகர் திடீரென மரணம்!

காரைதீவு, ஜூலை. 13

கதிர்காம பாதயாத்திரையில் பயணித்த மற்றுமொரு யாத்திரீகர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென மரணமானார்.

இச்சம்பவம் பாணமையில் இடம்பெற்று இருக்கிறது.

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த நடராஜா அருள்குமார் என்பவரே இவ் விதம் மரணமான யாத்திரீகர் ஆவார்.

இவர் காரைதீவில் திருமணம் முடித்தவர்.

இவரது பிரேதம் தற்சமயம் பாணமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

இவரை லாகுகலை பிரதேச பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். புனிதராஜன் பார்வையிட்டார்

இதேவேளை பாதயாத்திரை முதல் யாத்திரிகர் மரணம் கடந்த 8 ஆம் திகதி பொத்துவில் குண்டுமடு பகுதியில் வைத்து இடம்பெற்று இருக்கின்றது.

அவர் வவுனியாவை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 2027 பட்ஜெட் நவம்பர் 12 இல்!

கொழும்பு, ஜூலை. 13

2027 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 2027 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் செப்ரெம்பர் 18 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளதுடன், அதன் முதலாம் வாசிப்பு ஒக்டோபர் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

அமைச்சு வாரியான செலவு மதிப்பீடுகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுச் சட்டமூலம், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக செப்ரெம்பர் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 13 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், குழுநிலை விவாதம் நவம்பர் 21 முதல் டிசெம்பர் 14 ஆம் திகதி வரை தொடரும் என்றும் நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# உலகில் அதிக போக்குவரத்து நெரிசலான நாடுகளில் இலங்கைக்கு மூன்றாவது இடம்

கொழும்பு, ஜூலை. 13

உலகில் அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கிடையில், ஆசியாவில் அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள நாடுகளில் இலங்கை முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைத் தரம் குறித்த உலகின் மிகப்பெரிய தரவு சேகரிப்பான 'நம்பியோ' இணையதளம், தனது 2026 ஆம் ஆண்டின் இடைக்கால போக்குவரத்து குறியீட்டின் மூலம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அறிக்கையின்படி, உலகில் அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள நாடாக நைஜீரியா அறிவிக்கப்பட்டுள்ளது.

கோஸ்டாரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதற்கிடையில், எஸ்டோனியா மிகக் குறைந்த போக்குவரத்து நெரிசல் உள்ள நாடாகவும், ஆஸ்திரியா மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் மிகக் குறைந்த போக்குவரத்து நெரிசல் உள்ள நாடுகளாகவும் கருதப்படுகின்றன.

ஒரு பயணத்தில் செலவழித்த நேரம் மற்றும் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு போக்குவரத்து நெரிசல் தரவுகள் தயாரிக்கப்படுவதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

போக்குவரத்துக் குறியீடு என்பது பயண நேரம், போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் தொந்தரவு, காபனீரொக்சைட் வெளியேற்றம் மற்றும் ஒட்டுமொத்த போக்குவரத்து அமைப்பின் செயல்திறன் குறைபாடு போன்ற காரணிகளைக் கருத்தில் கொள்ளும் ஒரு கூட்டு அளவீடு ஆகும்.

இது ஒரு நகரத்தின் ஒட்டுமொத்த போக்குவரத்து நிலைமைகள் குறித்த ஒரு விரிவான புரிதலை வழங்குகிறது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.